**ஜனவரி - 13**

**"என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற யேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்." - 1யோவா 2:1**

விசுவாசத்தின் குறைவினாலோ அல்லது மாம்சத்தின் பலவீனத்திலோ கர்த்தருடைய சித்தத்திற்கும் நம்முடைய ஆவிக்குரிய நன்மைகளுக்கும் மாறாக நம்முடைய நடை தவறான வழியில் சென்றிருக்கிறதை நாம் கண்டுகொண்டோமானால், கர்த்தரை நோக்கிக்கூப்பிடவும் வந்த வழியே திரும்பிச் செல்லவும் எந்தக் காலதாமதமும் செய்யக்கூடாது. மிருகங்களின் இரத்தத்தினாலே ஆபிரகாம் பிரதிஷ்டை பண்ணின பலிபீடத்தைவிட, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பிரதிஷ்டை பண்ணப்பட்ட எவ்வகையிலும் மிகச் சிறந்த ஒரு பலிபீடம் நமக்குண்டு. ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் (முழு விசுவாசத்தோடு) கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி 4.16)

**- Z '01, 233 (R 2847).**

தேவனுடைய பிள்ளை பாவம் செய்வது நியாயமானதல்ல; ஆனால் அப்படிச் செய்தால், நீதியுள்ள கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் திறமைமிக்க பரிந்து பேசுதலினாலே பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்பதை அவன் நம்பலாம். ஒரு திறமை வாய்ந்த வக்கீல் தன்னுடைய கட்சிக்காரரின் ஆதரவாக எல்லா நல்ல காரியங்களையும் சொல்லி, தீய காரியங்களை மிகவும் சாத்தியமான வெளிச்சத்தில் வைக்கிறதுபோல, நம்முடைய வக்கீலாகிய (பரிந்து பேசுகிறவராகிய) யேசு தன்னுடைய புண்ணியத்தினாலே நம்முடைய எல்லாக் கறைகளையும் மூடி, பரலோகத்தின் நியாயஸ்தலத்திலே சகாயம் பெற்றிருக்கிற அவர், தன்னுடைய கட்சிக்காரராகிய நமக்காக வெற்றிகரமாகப் பரிந்து பேசுகிறார். **-P '26, 189, 190.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவா 16:7; ரோம 3:20-26: 4:24,25; 8:34; 10:4; 1கொரி 1:30; 2கொரி 5:18; பிலி 3:9; எபி 7:25; 9:24; 1யோவா 1:7; 2:2; 4:10;**

**கோபுர வாசிப்பு : Z '14, 201 (R 5491).**

**வினாக்கள் : இந்த வாரத்தின் எந்த அனுபவங்கள் என்னைப் பரிந்து பேசுகிறவரிடம் அனுப்பியது? அதன் விளைவு என்ன?**